நாள்.02.04.2024

**அசல் வழக்கு எண். 9/2018**

<u>பி.வா.சா.1- வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. 2ம் பிரதிவாதி எனது மனைவி. 3, 4 பிரதிவாதிகள் எனது மகள்கள். நாங்கள் எல்லோரும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம். வாதி சித்திநயிமா என்பவரை எனக்கு தெரியும். வாதி இந்த அசல் வழக்கை எங்களுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி வழக்கு புல எண் 316/1 ல் 20 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். புல எண் 316/1 ல் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். நான் உரிமை கோரும் சொத்து புல எண் 317/6 ல் என்றால் சரிதான். புல எண் 317/6 என்பது வழக்கு புல எண்ணிற்கு அடுத்த வடபுறம் உள்ளது என்றால் சரிதான். புல எண் 317/6 ல் எனக்கு எவ்வளவு சொத்து உரிமை என சொல்கிறேன் என்றால் 15 செண்டு முழு விஸ்திரணமும். நான் குடியிருக்கும் வீட்டிற்கு வடபுறம் கிழமேலாக காம்பவுண்டு சுவர் உள்ளது என்றால் இல்லை. வேலி அடைப்பு உள்ளதா என்றால் வடபுறத்தில் தாய் சுவர் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டிற்கு கீழ்புறம் என்ன உள்ளது என்றால் தாய் சுவர் உள்ளது. என் வீட்டிற்கு தென்புறம் என்ன உள்ளது என்றால் தாய் சுவர் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டிற்கு தென்புறம் அத்து உள்ளதா என்றால் அத்து உள்ளது. என்ன அத்து என்றால் செப்டிக் டேங் உள்ளது. தென்புறம் முழுமைக்கும் அந்த அத்து உள்ளதா என்றால் உள்ளது. எனது வீட்டிற்கு தென்புறம் உள்ள தாய் சுவற்றிற்கும் தென்புறம் எனக்கு எவ்வளவு சொந்தமான இடம் உள்ளது என்றால் புல எண் 317/6 ல் 1200 சதுர அடி உள்ளது. 1200 சதுர அடி என்பது எவ்வளவு செண்டு என்றால் 3 செண்டிற்கும் கூடுதலாக உள்ளது. எனது வீட்டிற்கு தென்புறம் உள்ள இடம் 3 செண்டு காலி இடமா என்றால் அந்த 3 செண்டில் செப்டிங் டேங்கும் உள்ளது. அந்த செப்டிக் டேங் எவ்வளவு அடி உள்ளது என்றால் 10X12 அடி அளவில் உள்ளது. எனது மாமனார் எப்பொழுது கிரையம் பெற்றார் என்றால் 1977 ல். எனது மாமனார் வாங்கிய இடத்தில் வீடு கட்டிவிட்டாரா என்றால் வீட்டுடன் வாங்கினார். பின்னர் அந்த பழைய வீட்டை இடித்து விட்டு புதுவீடு கட்டிவிட்டார். எந்த வருடம் புது வீடு கட்டப்பட்டது என்றால் 1979 ல். நான் பேரூராட்சியில் அனுமதி பெற்று தான் வீடு

கட்டியுள்ளேன் என்றால் சரிதான். பேரூராட்சியில் அனுமதி பெற்ற பிளான் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. அந்த பிளானை வாங்கி பார்த்தால் எங்கள் வீட்டிற்கு தென்புறம் 1200 சதுர அடி காலி மனை உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் உரிமை கோரும் இடத்திற்கு தென்புறம் உள்ள உரிமையாளர் யார் என்றால் அபுல்கசன் வகையறாவிற்கு சொந்தமான சொத்து உள்ளது. அந்த சொத்தில் எனக்கு கட்சி ஏதும் உண்டா என்றால் இல்லை. நான் உரிமை கோரும் சொத்திற்கு தென்புறம் உரிமையாளர் ஷேக் ஜலாலுதீன் என்பவருக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உரிமை கோரும் இடத்திற்கு அடுத்த தென்புறம் அபுல்கசன் வகையறாவிற்கு சொந்தமான சொத்து என எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் 1977 ல் உள்ள மூல ஆவணத்தின் படி உரிமை உள்ளது. மூல ஆவணம் என்பது என் மாமனார் 1977 ல் இக்ராம் என்பவரின் மனைவி அஸ் முனிசா என்பவரிடம் கிரையம் பெற்றார். அந்த கிரைய பத்திரத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் அபுல்கசன் வகையறாவிற்கு தெற்கு என கண்டு எழுதப்பட்டுள்ளது. அபுல்கசன் வகையறாவிற்கு தெற்கே யாருக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் முகமது மொய்தீன் மற்றும் வாதி ஆகியோர்களுக்கு சொந்தமான இந்தியன் வங்கி கட்டிடம் உள்ளது. நான் உரிமை கோரும் இடத்திற்கு தென்புறம் முகமது அபுல்கசன் வகையறா , அதற்கு அடுத்த தென்புறம் அவரது பேரன் முகமது மொய்தீன் மற்றும் அவரது மனைவி வாதி ஆகியோர்களுக்கு சொந்தமான சொத்து தான் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.8 ஏற்பட்ட தேதி 13.06.1958 ல். ஷேக் ஜலாலுதீன் என்பவர் பெயரில் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்து அபுல்கசன் அவர்களுக்கு சொந்தமான அல்ல என்பதற்காக இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்ட தேதி 01.07.1955 ல். வா.சா.ஆ.2 என்பது அஜி முனிசா என்பவரால் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். அந்த அஜி முனிசா என்பவரிடம் இருந்து தான் எனது மாமனார் கிரையம் வாங்கினார். மேற்படி வா.சா.ஆ.2 சொத்து விவரத்தில் தென்புறம் உரிமையாளர் முகமது அபுல்கசன் என கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 ன் படி என் மாமனார் கிரையம் பெற்ற சொத்தில் சொத்துவிவரத்தில் தென்புறத்தில் அபுல்கசன் வகையறா சொத்திற்கு தென்புறம் என கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ

1,2 ஆகிய ஆவணத்திலும் சொத்து விவரத்தில் தென்புறம் முகமது அபுல்கசன் வகையறா என்று தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 8 -ற்கு முன்பாகவே வழக்கு சொத்தின் உரிமையாளர் முகமது அபுல்கசன் வகையறா என்று எழுதப்பட்டுள்ளது. அதற்கான காரணம் என்னவென்று தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். முகமது அபுல்கசன்என்பவரின் மகன் ஷேக் ஜலாலுதீன் மற்றும் மகள் பாத்திமா அம்மாள் என்றால் சரிதான். அசல் வழக்கில் கண்ட வாதி, பாத்திமா அம்மாள் என்பவரின் மகள் என்றால் சரிதான். வாதியின் கணவர் முகமது மொய்தீன் என்பவர் ஷேக் ஜலாலுதீன் என்பவரின் முதல் மகன் என்றால் சரிதான். அதனால் வாதிக்கு ஷேக் ஜலாலுதீன் என்பவர் தாய்மாமன் என்றால் சரிதான். முகமது அபுல்கசன் என்பவருக்கு பெருவாரியான சொத்துகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முகமது அபுல்கசன் என்பவருக்கு அதிராம்பட்டிணத்திலுள்ள காதர் முகைதீன் கல்லூரி சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. அவர்களது அறக்கட்டளைக்கு சொந்தமானது என்றால் சரிதான். முகமது அபுல்கசன் என்பவரின் மகன் ஷேக் ஜலாலுதீன் என்பவர் இறந்தபிறகு அவரது குழந்தைகள் 1988 ல் பாகச்சீட்டுப்படி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த பாக சீட்டில் இந்த வழக்கு சொத்து சேர்க்கப்படவில்லை என்பது பற்றி தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகசீட்டில் தாவா சொத்து உட்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தும் மற்றும் வேறொரு சொத்தும் பாத்திமா அம்மாள் என்பவருக்கு வாய்மொழியாக கொடுத்தார்கள் என்றும் மீதமுள்ள பெருவாரியான சொத்துகளை ஷேக் ஜலாலுதீன் என்பவர் பாக வீதமான எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. பாத்திமா அம்மாளுக்கு பாத்தியப்பட்ட இவ்வழக்கு சொத்தை வா.சா.ஆ.1-ன் படி 23.08.1990 ல் வாதிக்கு கிப்பத்து எழுதிக்கொடுக்கப்பட்டு , அதன்படி வாதி தான் உரிமையாளர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து ஷேக் ஜலாலுதீன் வாரிசுகள் உரிமை கொண்டாடினார்களா என்றால் ஆமாம். வழக்கு சொத்து தனக்கு தான் பாத்தியப்பட்டது என இந்த வழக்கில் கண்ட வாதி பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 3/2010 என்ற வழக்கை ஷேக் ஜலாலுதீன் இறந்த பிறகு அவரது வாரிசுகள் 13 நபர்கள் மீது தாக்கல் செய்து அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கில் பிராது தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அசல் வழக்கில் அபுல்கசன்

என்பவர் ஷேக் ஜலாலுதீன்  என்பவரின் மகன்களில் ஒருவர் என்றால் சரிதான். வாதிக்கு கொழுந்தன் உறவு என்றால் சரிதான். அபுல்கசன் த.பெ. ஷேக் ஜலாலுதீன் என்பவர் அசல் வழக்கில் தன்னை ஒரு தரப்பினராக சேர்க்ககோரி மனு தாக்கல் செய்திருந்தார்.  அந்த இ.ம.எண் 557/2018 என்ற நம்பரில் விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.  அதனால் வாதிக்கு தாவா சொத்தில் தனி உரிமையாளர் என்ற அடிப்படையிலும், கூட்டு உரிமையாளர் என்ற அடிப்படையிலும் இந்த வழக்கை மூன்றாம் தரப்பினரிடமிருந்து பாதுகாக்க இந்த வழக்கு தொடர்ந்து நடத்த அருகதை உடையவர் என்றால் வாதிக்கு தாவா சொத்தில் எந்தவிதமான உரிமையும் கிடையாது.  எனக்கும்   , வாதிக்கும் முதன்முதலில் 02.01.2018 ல் சச்சரவு ஏற்பட்டது என்றால் அன்றைய தினமும் சச்சரவு ஏற்பட்டது. அதற்கு முன்பும் சச்சரவு ஏற்பட்டது.  02.01.2018-ற்கு முன்பு சச்சரவு ஏற்பட்டது குறித்து எவ்வித ஆதாரமும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist  to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.